# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8073038

C 03/2019/AC/CB

1. District : Coimbatore District PS: Vigilance and Anti Corruption Year: 2019 FIR No.: Date: 23.01.2019
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள் at 1330 hrs.

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7(a) & 12
(ii) Act சட்டம்: as amended by Prevention of Corruption Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 03.12.2018 Date to : 22.01.2019
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 11.00 hrs Time to : 0940 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 21.01.2019 Time : 18.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 21.01.2019 VOL-I Time : 18.00 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Tamil Typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 30 Kms, South East
Beat Number : (b) Address : Village Administrative Office, Kaniyur, Sulur Taluk, Coimbatore
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. Prakash Babu (b) Father's/ Husband's Name : V. Srinivasan
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 36/2019 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Agriculturist (g) Address : D.No. 3/6, Lakshmapuram, Pollachi Taluk, Coimbatore District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1) Tmt. Shanthi, Village Administrative Officer, Kaniyur Village, Sulur Taluk, Coimbatore.

(2) Tr. Palaniappan, Village Menial, O/o Kaniyur VAO Office, Sulur Taluk, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு S. Prakash babu 23/01/19

Signature of the Officer in-charge, Police Station 23/01/2019
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 23.01.2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 1430 hrs.

Name: பெயர் G. Arumugam
Rank: நிலை Inspector of Police, Vigilance and Anti-Corruption, Coimbatore.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/2019/AC/CB, u/s 7(a) & 12 of Prevention of Corruption Act 1988 as Amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி

21.01.2019–ம் தேதி திங்கட்கிழமை மாலை 1800 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை மாவட்டம் பொள்ளாச்சி தாலூக்கா, லட்சுமாபுரம், க.எண்.3/6 ல் வசிக்கும் V.சீனிவாசன் மகன் S.பிரகாஷ் பாபு, வயது–36 என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கோயம்புத்தூர் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு நேரில் ஆஜராகி கொடுத்தார். வாதிக்கு அடுத்த நாள் 22.01.2019 ம் தேதி தனது விவசாய பூமியில் வேலை இருப்பதாகவும் அதனை முடித்து விட்டு 23.01.2019 ம் தேதி வருவதாக கூறினார். பொறி வைப்பு நடவடிக்கைக்கு விருப்பம் இருப்பின் எதிரிகள் கேட்ட பணம் ரூ.5000/– உடன் 23.01.2019 ம் தேதி கோவை ஊ.த.க அலுவலகத்திற்கு வரும்படி அறிவுறுத்தி அனுப்பி வைக்கப்பட்டது. அந்த புகாரின் அடிப்படையில் எதிரிகளின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகாரில் சொல்லப்பட்டது போல் புகார்தாரரிடம் திருமதி.சாந்தி மற்றும் திரு.பழனியப்பன் ஆகியோர்கள் பட்டா மாறுதல் வழங்க பரிந்துரை செய்வதற்கு வேண்டி லஞ்சமாக பணம் கேட்டது தெரிகிறது. மேலும் புகார்தாரரின் முன்நடத்தை மற்றும் புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் அவரது புகார் நம்பகத்தன்மை கொண்டது என்றும் தெரியவந்தது. வாதி இன்று 23.01.2019 ம் தேதி மதியம் 13.00 மணிக்கு எதிரிகள் கேட்ட பணத்துடன் ஊ.த.க அலுவலகத்திற்கு வந்தும், 22.01.2019 ம் தேதி காலை சுமார் 09.40 மணிக்கு தான் தண்டல்காரர் திரு.பழனியப்பனிடம் செல்போனில் தொடர்பு கொண்டு வி.ஏ.ஓ விடம் பேசி கொஞ்சம் கம்மி பண்ண சொல்ல கேட்டிருந்தது என்னாச்சு என்று கேட்க, அதற்கு அவர் வி.ஏ.ஓ அம்மா அவர்கள் கேட்ட பணத்தை கொடுத்து வேலையை முடித்து செல்லுமாறு சொல்லியுள்ளதாக கூறினார். அதனால் தனக்கு பணம் கொடுக்க விருப்பம் இல்லை என்றும் தான் பொறிவைப்பு நடவடிக்கைக்கு விருப்பம் தெரிவிப்பதாகவும் தெரிவித்தார். அதன் பேரில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை

இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 23.01.2019 ம் தேதி 1330 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/2019/AC/CB u/s 7(a) &12 of Prevention of Corruption Act 1988 as Amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி மேற்படி எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு– அனுப்புநர் S.பிரகாஷ் பாபு, வயது–36, த/பெ. V.சீனிவாசன், க.எண்.3/6, லட்சுமாபுரம், பொள்ளாச்சி தாலுகா, கோவை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோவை. அய்யா, நான் பொள்ளாச்சி தாலுகா லட்சுமாபுரம் கிராமத்தில் என் மனைவி மற்றும் மகனுடன் குடியிருந்து வருகிறேன். நான் BE படித்துள்ளேன். எனக்கு சொந்தமாக ஊரில் 5 ஏக்கர் விவசாயம் நிலம் உள்ளது. அதில் நான் தென்னை மரம் வைத்து விவசாயம் செய்து வருகிறேன். நான் கடந்த 2012 ஆம் வருடம் சூலூர் தாலுகா கனியூர் கிராம சர்வே எண்.239/2A1-ல் உள்ள S.K.கார்டனில், திரு.சுப்பையன் மற்றும் திரு.முருகேஷன் என்பவர்களிடமிருந்து காலி மனை ஒன்று வாங்கினேன். என்னுடன் சேர்ந்து என் தங்கை திருமதி.நர்மதாவின் கணவர் திரு.விஜயசேகர் அவர்கள் இரண்டு காலி மனைகள் (சைட் எண்.68,69) தலா 2200 சதுர அடியிலும், எனது தங்கையின் தோழி திருமதி.அம்சவேணி என்பவர் ஒரு காலி மனை (சைட் எண்.71) 2200 சதுர அடியிலும் வாங்கினார்கள். எனது தங்கை தற்போது அவரது கணவர் திரு.விஜயசேகருடன் அமெரிக்காவில் வசித்து வருகிறார்கள். மேற்கண்ட மனைகளை அவரவர்கள் பெயரில் பாட்டா மாறுதல் செய்வதற்காக, அவர்கள் என்னிடம் கேட்டு கொண்டதன்பேரில், நான் கடந்த 26.11.2018 ஆம் தேதியன்று கோமங்கலம்புதூரில் உள்ள இ–சேவை மையத்தில் தகுந்த ஆவணங்களுடன் விண்ணப்பித்தேன். அதன் பின்பு 03.12.2018 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு கனியூர் வி.ஏ.ஓ அலுவலகம் சென்றும் வி.ஏ.ஓ அவர்களை சந்தித்து பட்டா மாறுதல் விண்ணப்பம் ஆன்லைனில் விண்ணப்பித்திருந்த விவரத்தை கூறினேன். அவரிடம் நான் ஆவணங்களை ஆஜர் செய்தேன். அவரும் அதை சரிபார்த்த பின்னர் என்னிடம் ஒரு விண்ணப்பத்திற்கு ரூ.3,000/– வீதம் நான்கு விண்ணப்பங்களுக்கு ரூ.12,000/– தர வேண்டும் என்று சொன்னார். நான் ரொம்ப அதிகமாக இருக்கிறது. குறைத்து சொல்லுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் உங்கள் பெயரில் உள்ள விண்ணப்பத்திற்கு ரூ.3000/– மட்டும் கொடுங்கள் மற்ற பணத்தை அந்தந்த விண்ணப்பதாரர்களிடம் வாங்கிக்கொடுங்கள் என்று சொன்னார். பணம் இல்லாவிட்டால் பட்டா மாறுதல் கிடைக்காது என்று சொல்லி பணத்துடன் வர

சொன்னார். நான் அவரிடம் கேட்டு சொல்வதாக சொல்லி விட்டு வந்து விட்டேன். பின்னர் சூலூர் வட்டாட்சியர் அலுவலகம் சென்று அங்குள்ள அலுவலரை சந்தித்து ஆவணங்களை கொடுத்து பட்டா மாறுதல் சம்மந்தமாக சொன்ன போது அவரும் நீங்க எதுக்கு இங்கு வந்தீர்கள், நான் பட்டா மாறுதல் செய்து கொடுத்து விடுகிறேன் என்று சொன்னார். பின்னர் சில நாள் கழித்து எனது பெயருக்கு மட்டும் பெயர் மாற்றம் செய்யப்பட்டு பட்டா மாறுதல் வழங்கப்பட்டுள்ளது என்றும் திரு.விஜயசேகர் மற்றும் திருமதி.அம்சவேணி ஆகியோர்களின் விண்ணப்பங்கள் 26.12.2018 ஆம் தேதி நிராகரிக்கப்பட்டது என்றும் என்னுடைய வீட்டில் உள்ள கணிணியில் ஆன்லைன் மூலம் பார்த்து தெரிந்து கொண்டேன். பின்னர் 28.12.2018 அன்று கோமங்கலம்புதூர் இ–சேவை மையத்தின் விண்ணப்பம் நிராகரிப்பு சம்மந்தமாக கேட்ட போது ஏதாவது ஆவணங்கள் இணைக்காமல் விடுபட்டு போயிருக்கும் என்று சொல்லி மீண்டும் விண்ணப்பிக்குமாறு சொன்னார். எனவே நான் அன்றைய தினமே அந்த இ–சேவை மையத்தில் திரு.விஜயசேகர் பெயரில் உள்ள மேற்படி இரண்டு காலி மனைக்கும் மற்றும் திருமதி.அம்சவேணி என்ற பெயரில் உள்ள ஒரு காலி மனைக்கும் பட்டா மாறுதல் வேண்டி மீண்டும் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்தேன். மேற்படி எனது தங்கையின் கணவர் திரு.விஜயசேகர் அவர்களது இரண்டு காலி மனைகளின் விண்ணப்ப எண்கள் முறையே 1) 2018/0103/12/153027 மற்றும் 2) 2018/0103/12/153033 ஆகும். மேலும் எனது தங்கையின் தோழி திருமதி.அம்சவேணி அவர்களது ஒரு காலி மனைக்கான விண்ணப்ப எண்.2018/0103/12/153034 ஆகும். பின்னர் கடந்த 04.01.2019 ஆம் தேதி காலை கனியூர் வி.ஏ.ஒ அலுவலகத்திற்கு மேற்படி பட்டா மாறுதல் சம்மந்தமான ஆவணங்களுடன் சென்று அங்கிருந்த தண்டல்காரர் திரு.பழனியப்பன் அவர்களை சந்தித்து இ–சேவை மையத்தில் பட்டா மாறுதல் சம்மந்தமாக கேட்டேன். அப்போது அங்கு வி.ஏ.ஒ திருமதி.சாந்தி அவர்களும் இருந்தார்கள். தண்டல்காரர் திரு.பழனியப்பன் அவர்கள் எனது ஆவணங்களை பார்த்து அதில் குறிப்பிட்டுள்ள செல்போன் நெம்பரை காண்பித்து இது உங்கள் நெம்பரா என்று கேட்டார், நானும் ஆமாம் என்று சொன்னேன். பின்னர் அவர் என்னிடம் ஒரு பட்டா மாறுதல் விண்ணப்பத்திற்கு ரூ.2,000/– வீதம் 3 பட்டா மாறுதலுக்கு மொத்தம் ரூ.6,000/– ஐ உங்களிடம் கேட்டு வாங்க வேண்டுமென்று வி.ஏ.ஒ அம்மா சொல்லியுள்ளார் என்று கூறினார். அப்போது நான் அவரிடம் ஒரு அப்ளிகேஷனுக்கு ரூ.2,000/– என்றால் எப்படிங்க என்று கேட்டேன். அதற்கு அவர் வி.ஏ.ஒ அம்மா கேட்டதை தான் சொல்லியுள்ளேன் நீங்கள் வேண்டுமென்றால் வி.ஏ.ஒ அம்மாவிடமே கேட்டு

கொள்ளுங்கள் என்று சொன்னார். நான் அவரிடம் வி.ஏ.ஓ அம்மா கட்டாயமா ரூ.2,000/– கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்களா என்று கேட்டேன். அதற்கு அவர் ஆமாம் என்று சொன்னார். நான் அவரிடம் கொஞ்சம் பார்த்து பண்ணிகொடுக்க சொல்லுங்கள் என்று சொன்னேன். அதற்க அவர் வி.ஏ.ஓ அம்மா ஒரு அப்ளிகேஷனுக்கு ரூ.2,000/– வாங்க சொல்கிறார்கள், நான் என்ன செய்வது என்று சொல்லி நீங்கள் என்ன அபிப்பிராயப்படுகிறீர்கள் என்று என்னிடம் கேட்டார். அப்போது நான் அவரிடம் பட்டா மாறுதலுக்கு இவ்வாறு கேட்டால் எப்படிங்க என்று அவரிடம் கேட்டேன். இவ்வாறு நான் சொன்னதும், நாங்கள் பேசுவதை கேட்டுக்கொண்டிருந்த வி.ஏ.ஓ திருமதி.சாந்தி அவர்கள் என்னை பார்த்து நீங்கள் கிளம்புங்கள், பார்ட்டியை வரச்சொல்லுங்கள் என்று சொன்னார். நான் அவர் அருகே சென்று அவரிடம் கொஞ்சம் பார்த்து பண்ணுங்கள் என்று சொன்ன போது அவர் கோபித்து கொண்டு நீங்கள் எதுவும் பேசாதீர்கள், கிளம்புங்கள், அன்றைக்கும் நீங்கள் இப்படியே தான் பேசிக்கொண்டிருந்தீர்கள், எல்லா விண்ணப்பித்திலும் உங்களுடைய போன் நெம்பரை தான் எழுதி வைத்திருக்கிறீர்கள், பார்ட்டியின் நெம்பரை எழுதுங்கள் நான் அவர்களை கூப்பிட்டு வரச்சொல்லி கொள்கிறேன் என்று சொன்னார். நான் வி.ஏ.ஓ விடம், நான் வந்தால் பத்தாதா என்று கேட்டேன். அப்போது வி.ஏ.ஓ பூமி அவர்களுடையது தானே அவர்களை வரச்சொல்லுங்கள் என்று சொன்னார். அப்போது நான் அவரிடம் விண்ணப்பதாரரில் ஒருவர் எனது மச்சான் அதாவது என்னுடைய தங்கையின் வீட்டுக்காரர் என்றும் அவரது பெயரில் இரண்டு விண்ணப்பங்கள் உள்ளது என்றும் இன்னொருவர் என் தங்கையின் தோழி என்றும் சொன்னேன். அப்போது அவர் இதெல்லாம் அன்று சொல்லவில்லையே மாற்றி மாற்றி சொல்கிறீர்கள் என்று சொன்னார். நான் அவரிடம் எவ்வளவு பணம் என்று சொல்லுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் பேரமே பேச வேண்டாம், நீங்கள் அன்றைக்கும் இப்படிதான் பேசி கொண்டிருந்தீர்கள் என்று கோபமாக சொன்னார். நான் அவரிடம் ஒரு அப்ளிகேஷனுக்கு ரூ.2,000/– சொல்கிறார், குறைத்து சொல்லுங்கள் என்று கேட்டேன். அதற்கு, தண்டல்காரர் சொன்னதை கொடுங்கள் என்று என்னிடம் சொன்னார். நான் கொஞ்சம் கம்மி பண்ணுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் எவ்வளவு கம்மி பண்ணலாம், நீங்களே சொல்லுங்கள் என்று என்னிடம் சொன்னார். நான் மொத்தம் ரூ.3,000/– தருகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் என்ன சார் நீங்கள் இப்படி சொல்றீங்க என்று கேட்டார். நானும் நீங்கள் கேட்டதால் தான் சொன்னேன் என்று சொன்னேன். அதற்கு அவர் நான் கேட்டதை தான் அவர் உங்களிடம் கேட்டுள்ளார் என்று அங்கிருந்த

தண்டல்காரரை காட்டி சொன்னார். நானும் அவரிடம் கொஞ்சம் கம்மி பண்ணி கொடுங்கள் என்று தான் கேட்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் ரூ.1000/— ஐ குறைத்து கொண்டு ரூ.5,000/— ஐ அவரிடம் கொடுத்து விட்டு போங்கள் என்று அங்கிருந்த தண்டல்காரர் திரு.பழனியப்பனை காட்டி சொல்லி, பட்டா மாறுதலுக்கு பரிந்துரை செய்து ஒவ்வொரு விண்ணப்பமாக பட்டா மாறுதல் பெற்று தருகிறேன் என்றும் சென்னார். நான் மீண்டும் அவரிடம் ரூ.3,000/— கொடுக்கிறேன் என்று சொன்ன போது அவர் கோபித்து கொண்டு என்னை போக சொன்னார். நானும் வேறு வழியில்லாததால் பணம் கொண்டு வருகிறேன் என்று சொல்லி வந்துவிட்டேன். அதன் பின்பு 10.01.2019 ம் தேதி மாலை சுமார் 4.20 மணிக்கு எனது செல்போன் நெம்பர் 9942346428 லிருந்து தண்டல்காரர் திரு.பழனியப்பன் செல்போன் நெம்பர் 9865328152 க்கு தொடர்பு கொண்டு கனியூர் வி.ஏ.ஓ அவர்கள் கேட்ட பணத்தை குறைக்க சொல்லும்படி கேட்டேன், அதற்கு அவர் வி.ஏ.ஓ அம்மா அவர்கள் குறைக்க மாட்டார்கள் என்று சொல்லி விட்டார். நான் திரும்பவும் வி.ஏ.ஓ அவர்களிடம் பணத்தை குறைக்க சொல்லி கேளுங்கள். நான் பின்னர் அழைக்கிறேன் என்று சொல்லிவிட்டேன். எனக்கு உடல் நிலை சரியில்லாமல் சிகிச்சை பெற்று வந்ததால் என்னால் உடனடியாக புகார் கொடுக்க வரமுடியவில்லை. மேலும் வி.ஏ.ஓ அவர்கள் லஞ்சம் பெறாமல் பட்டா மாறுதல் கிடைக்க பரிந்துரை செய்து விடுவார் என்றும் பட்டா மாறுதல் கிடைத்துவிடும் என்றும் இருந்து விட்டேன். ஆனால் இன்று 21.01.2019 ஆம் தேதி நான் ஆன்லைனில் மேற்படி பட்டா மாறுதல் சம்மந்தமாக செக் செய்து பார்த்ததில் வி.ஏ.ஓ அவர்கள் எனது பட்டா மாறுதலுக்காக பரிந்துரை செய்யப்படாமல் அவரிடமே நிலுவையில் இருந்து வருவதாக தெரிந்தது. வி.ஏ.ஓ அவர்கள் லஞ்ச பணம் பெறாமல் பட்டா மாறுதலுக்கு பரிந்துரை செய்யமாட்டார் என்று தெரிகிறது. நான் யோசித்து பார்த்தேன். எனக்கு எனது தங்கையின் கணவர் திரு.விஜயசேகர் மற்றும் தங்கையின் தோழி திருமதி.அம்சவேணி ஆகியோர் பெயர்களுக்குண்டான பட்டா மாறுதலுக்கு பரிந்துரை செய்ய வி.ஏ.ஓ திருமதி.சாந்தி அவர்களுக்கு நேரடியாகவோ அல்லது தண்டல்காரர் திரு.பழனியப்பன் அவர்கள் மூலமாகவோ லஞ்சமாக பணம் ரூ.5,000/— கொடுக்க விருப்பமில்லை. எனவே லஞ்சம் கேட்கும் வி.ஏ.ஓ திருமதி.சாந்தி மற்றும் தண்டல்காரர் திரு.பழனியப்பன் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் x/x/x/x/ (S.பிரகாஷ் பாபு, 21/1/19) இடம் — கோவை, நாள் — 21.01.2019. Sir received the complaint on 21.01.2019 at 1800 hrs Sd/- x-x-x-x 21.01.2019 (G.Arumugam) Inspector of Police, V&AC Coimbatore. Sir, after conducting

discreet enquiry, registered a case in Coimbatore V&AC Cr.No.3/2019/AC/CB u/s 7(a) &12 of Prevention of Corruption Act 1988 as Amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 on 23.01.2019 at 1330 hrs Sd/- x-x-x-x 21.01.2019 (G.Arumugam) Inspector of Police, V&AC Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

23/01/2019

(G.ஆறுமுகம்)
காவல்ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.

அனுப்புநர்

S.பிரகாஷ் பாபு, வயது–36,
த/பெ. V.சீனிவாசன்,
க.எண்.3/6, லட்சுமாபுரம்,
பொள்ளாச்சி தாலூகா,
கோவை மாவட்டம்.

பெறுநர்

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோவை.

அய்யா,

நான் பொள்ளாச்சி தாலூகா லட்சுமாபுரம் கிராமத்ததில் என் மனைவி மற்றும் மகனுடன் குடியிருந்து வருகிறேன். நான் BE படித்துள்ளேன். எனக்கு சொந்தமாக ஊரில் 5 ஏக்கர் விவசாயம் நிலம் உள்ளது. அதில் நான் தென்னை மரம் வைத்து விவசாயம் செய்து வருகிறேன். நான் கடந்த 2012 ஆம் வருடம் சூலூர் தாலூகா கனியூர் கிராம சர்வே எண்.239/2A1-ல் உள்ள S.K.கார்டனில், திரு.சுப்பையன் மற்றும் திரு.முருகேஷன் என்பவர்களிடமிருந்து காலி மனை ஒன்று வாங்கினேன். என்னுடன் சேர்ந்து என் தங்கை திருமதி.நர்மதாவின் கணவர் திரு.விஜயசேகர் அவர்கள் இரண்டு காலி மனைகள் (சைட் எண்.68,69) தலா 2200 சதுர அடியிலும், எனது தங்கையின் தோழி திருமதி.அம்சவேணி என்பவர் ஒரு காலி மனை (சைட் எண்.71) 2200 சதுர அடியிலும் வாங்கினார்கள். எனது தங்கை தற்போது அவரது கணவர் திரு.விஜயசேகருடன் அமெரிக்காவில் வசித்து வருகிறார்கள். மேற்கண்ட மனைகளை அவரவர்கள் பெயரில் பாட்டா மாறுதல் செய்வதற்காக, அவர்கள் என்னிடம் கேட்டு கொண்டதன்பேரில், நான் கடந்த 26.11.2018 ஆம் தேதியன்று கோமங்கலம்புதூரில் உள்ள இ–சேவை மையத்தில் தகுந்த ஆவணங்களுடன் விண்ணப்பித்தேன். அதன் பின்பு 03.12.2018 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு கனியூர் வி.ஏ.ஓ அலுவலகம் சென்றும் வி.ஏ.ஓ அவர்களை சந்தித்து பட்டா மாறுதல் விண்ணப்பம் ஆன்லைனில் விண்ணப்பித்திருந்த விவரத்தை கூறினேன். அவரிடம் நான் ஆவணங்களை ஆஜர் செய்தேன். அவரும் அதை சரிபார்த்த பின்னர் என்னிடம் ஒரு விண்ணப்பத்திற்கு ரூ.3,000/– வீதம் நான்கு விண்ணப்பங்களுக்கு ரூ.12,000/– தர வேண்டும் என்று சொன்னார். நான் ரொம்ப அதிகமாக இருக்கிறது. குறைத்து சொல்லுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் உங்கள் பெயரில் உள்ள விண்ணப்பத்திற்கு ரூ.3000/– மட்டும் கொடுங்கள் மற்ற பணத்தை அந்தந்த விண்ணப்பதாரர்களிடம் வாங்கிக்கொடுங்கள் என்று சொன்னார். பணம் இல்லாவிட்டால் பட்டா மாறுதல் கிடைக்காது என்று சொல்லி பணத்துடன் வர

சொல்லிவிட்டேன். எனக்கு உடல் நிலை சரியில்லாமல் சிகிச்சை பெற்று வந்ததால் என்னால் உடனடியாக புகார் கொடுக்க வரமுடியவில்லை. மேலும் வி.ஏ.ஓ அவர்கள் லஞ்சம் பெறாமல் பட்டா மாறுதல் கிடைக்க பரிந்துரை செய்து விடுவார் என்றும் பட்டா மாறுதல் கிடைத்துவிடும் என்றும் இருந்து விட்டேன். ஆனால் இன்று 21.01.2019 ஆம் தேதி நான் ஆன்லைனில் மேற்படி பட்டா மாறுதல் சம்மந்தமாக செக் செய்து பார்த்ததில் வி.ஏ.ஓ அவர்கள் எனது பட்டா மாறுதலுக்காக பரிந்துரை செய்யப்படாமல் அவரிடமே நிலுவையில் இருந்து வருவதாக தெரிந்தது. வி.ஏ.ஓ அவர்கள் லஞ்ச பணம் பெறாமல் பட்டா மாறுதலுக்கு பரிந்துரை செய்யமாட்டார் என்று தெரிகிறது. நான் யோசித்து பார்த்தேன். எனக்கு எனது தங்கையின் கணவர் திரு.விஜயசேகர் மற்றும் தங்கையின் தோழி திருமதி.அம்சவேணி ஆகியோர் பெயர்களுக்குண்டான பட்டா மாறுதலுக்கு பரிந்துரை செய்ய வி.ஏ.ஓ திருமதி.சாந்தி அவர்களுக்கு நேரடியாகவோ அல்லது தண்டல்காரர் திரு.பழனியப்பன் அவர்கள் மூலமாகவோ லஞ்சமாக பணம் ரூ.5,000/– கொடுக்க விருப்பமில்லை. எனவே லஞ்சம் கேட்கும் வி.ஏ.ஓ திருமதி.சாந்தி மற்றும் தண்டல்காரர் திரு.பழனியப்பன் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கிறேன்.

இப்படிக்கு,
S. Prakash babu
21/01/19

இடம் – கோவை,
நாள் – 21.01.2019.

Sir, Received the complaint on 21.01.2019 at 1800 hrs

[signature] 21/01/2019
G. Arumugam
Inspector of police
VSACB, Coimbatore

Sir, After conducting discreet enquiry, registered a case in Coimbatore VSACB Cr.No. 03/2019/AC/CB. U/s 7(a) and 12 of Prevention of Corruption act 1988 as amended by Prevention of corruption (Amendment) act 2018 on 23.01.2019 at 1330 hrs

[signature] 23/01/2019
G. Arumugam
Inspector of police
VSACB, Coimbatore